தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 மார்ச் 21, திங்கட்கிழமை

பங்குனி 7, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை."

இயற்கையான அறிவோடு நூல் அறிவையும், கொண்டுள்ளார்க்கு எதிராக நிற்கக்கூடிய நுட்பமான சூழ்ச்சிகள் எவை உள்ளன !

(குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) அவை அலுவல் தொடங்கும் முன்பே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் எதுவும் கொடுக்காமல், பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்றால், நான் திருக்குறள் சொன்னதற்குத் தான் பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்று வரும். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் என்னிடம் நான் பேச வேண்டும் என்று முன்கூட்டியே தெரிவித்து இருக்க வேண்டும். (குறுக்கீடு) பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்றால் ஏதாவது நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறபோது, அதிலே பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் இருந்தால் எழுப்பலாம். ஆனால் நிகழ்ச்சியே இனிமேல்தான் தொடங்க இருக்கிறது. இப்போது திருக்குறள்தான் படித்து இருக்கிறேன். (குறுக்கீடு) . . . .

[1994 மார்ச் 21

திரு. எஸ். திருநாவுக்கரசு: நடக்கப்போவது குறித்து பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.. (குறுக்கீடுகள்)

மர்ண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) அதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் வராது. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, நேற்று உங்களுக்குப் பழையபடி நேரம் கொடுத்து, நீங்கள் பேசி முடித்ததாகச் சொல்லி, தமிழரசன் ஆரம்பிப்பார் என்பதையும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்). உட்காருங்கள். இதிலே பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடுகள்) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் தொடர்ச்சி. திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். திருநாவுக்கரசு: ** (குறுக்கீடுகள்) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, முறைகேடாக நடந்துகொள்கிற திருநாவுக்கரசு உடனடியாக அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, முறைகேடான வார்த்தையை இப்போது அவையைப் பார்த்து உச்சரித்த திருநாவுக்கரசு அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) மார்ஷல், திருநாவுக்கரசை காவலர்களுடைய துணையோடு வெளியேற்றலாம். திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடுகள்)

(திரு. எஸ். திருநாவுக்கரசு அவைக் காவலர்களால் அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்க முடியாது. திரு. செ. கு. தமிழரசன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.